சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.6/2026

இன்

அசல் வழக்கு எண்.55/2014

....

R. பழனியப்பன் ....மனுதார் / பிரதிவாதி

..எதிர்..

அப்துல் ரகுமான் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 08.04.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.ராஜாக்கிளி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் L.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கில் PW3 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக மேற்படி PW3 ஐ Recall செய்ய தகுந்த உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 18 விதி 17 மற்றும் சிபிசி பிரிவு 151-ன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

தாவா மனுவானது கடந்த 18.02.2026-ம் தேதியன்று வாதி தரப்பில் வா.சா.3 ஆக கையெழுத்து நிபுணர் விசாரணை செய்யப்பட்டு சா.சா.ஆ.2 குறியீடு செய்யப் பட்டுள்ளது. மேற்படி வா.சா.3 ஐ பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் முன்னிலையாகாத காரணத்தால் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்திட இயலவில்லை என்றும், அன்றையதினம் பிரதிவாதி நேரில் ஆஜராகி வா.சா.3ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டது என்றும் இருந்த போதும் வா.சா.3-ன்

குறுக்கு விசாரணையை அன்றையதினமே முடித்து வைக்கப்பட்டது என்றும் மேலும் பிரதிவாதி தரப்பு சாட்சியமும் முடித்து வைக்கப்பட்டது என்றும், தற்போது அசல் வழக்கானது இருதரப்பு வாதத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி தனது தரப்பில் சாட்சியம் அளித்திடாத சூழ்நிலையில் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளித்திட வாய்ப்பு இல்லாத சூழல் உள்ளது என்றும் எனவே தாவா அசல் வழக்கு வாதத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டதை Re-call செய்து வா.சா.3 சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்வதற்காகவும் பிரதிவாதி தரப்பு சாட்சியம் அளித்திடுவதற்காகவும் Re-call செய்திட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி 2014-ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்தினைப் பொறுத்து அசல் வழக்கு எண்.28/2014 என்ற எண்ணில் பிரதிவாதி வழக்க ஒன்றை தாக்கல் செய்து மேற்படி வழக்கானது மாண்புமிகு சிவகங்கை முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் சமூகம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அசல் வழக்கு எண்.92/2021 என எண்ணிடப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது மேற்படி வழக்கினை மேல்நடத்தாமல் பிரதிவாதி தள்ளுபடிக்கு விட்டுவிட்டார் என்றும் தாவா வழக்கில் வாதி தரப்பில் இரு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு 3வது சாட்சியாக கையெழுத்து நிபுணரும் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1, வா.சா.2 ஆகியோர்களையும் உரிய காலத்தில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்திடாமல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்கு பிறகு உரிய மனுவையும் பிரதிவாதி தாக்கல் செய்து மேற்படி மனுக்கள் செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்ட பிறகே வாதி தரப்பு 2 சாட்சிகளும் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றும், தற்பொழுது நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜரான கையெழுத்து நிபுணரையும் குறுக்கு விசாரணை செய்யாமல் அசல் வழக்கை காலம் கடத்த தாவா மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி மனு தாக்கல் செய்துள்ளது பிரதிவாதியின் கெட்ட எண்ணம், தவறான நடவடிக்கை ஆகியவற்றினை எடுத்துக்காட்டுகிறது என்றும், தாவா மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மாறாக தாவா மனுவினை

தள்ளுபடி செய்திடவேண்டும் என்றும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவா மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது சரியா என்று பார்க்கையில் தாவா அசல் வழக்கானது ஏற்றுகை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கு பிரச்சனை குறித்து இருதரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்கி முடிவு காண்பது நீதியின் நலனுக்கு உகந்த ஒன்று ஆகும் தாவா மனுவில் வாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட வா.சா.3 அரசு அலுவலர் ஆவார். மேற்படி அரசு அலுவலரை சாட்சியாக விசாரணை செய்திட எதிர்மனுதாரர் தரப்பில் அவருக்கான படி செலுத்தப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டு வா.சா.3 சாட்சியம் அளித்து சென்றுள்ளார். அழைப்பாணையின் பேரில் அரசு அலுவலர் ஒருவர் அழைக்கப்பட்டிருக்கும்போது மேற்படி சாட்சியை அன்றையதினமே எதிர்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்திட வேண்டும் என்பது சட்ட நிலைபாடு ஆகும். அவ்வாறு குறுக்கு விசாரணை செய்திடாமல் கால அவகாசம் கோரிட இயலாது என்ற நிலையில் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகாமல் பிரதிவாதி முன்னிலையாகி கால அவகாசம் கோரியதை நீதிமன்றம் கருத்தில் கொண்டும் மேற்படி அழைப்பாணை சாட்சியான வா.சா.3 ஐ குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைத்திட இயலாது என்பதால் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்திடுவது முடித்து வைக்கப்பட்டது. மேற்படி வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்திட சட்டப்படியான நடவடிக்கை எடுத்திட பிரதிவாதிக்கு உரிமை உள்ளது. அந்த வகையில் தாவா மனுவினை பிரதிவாதி தாக்கல் செய்து வா.சா.3ஐ மீண்டும் அழைத்து அவரை குறுக்கு விசாரணை செய்திட பரிகாரம் கேட்டுள்ளார்.

மேற்படி வா.சா. 3ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்திடுவதற்கு பிரதிவாதிக்கு உரிய வாய்ப்பு வழங்கிடுவது நீதியின் நலனுக்கு உகந்த ஒன்றாகும். மேற்படி சாட்சி வருகைக்கான படித்தொகை செலவினங்களை பிரதிவாதியே சட்டப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் வா.சா.ஆ.3ஐ மீண்டும் அழைத்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு Re-call மனுவானது அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

7. மேலும் தாவா மனுவில் பிரதிவாதி சாட்சியம் அளித்திடவில்லை என்றும் பிரதிவாதி தரப்பு சாட்சியம் இல்லாமல் வழக்கை மேல்நடத்திட இயலாது என்றும் ஆகவே பிரதிவாதி தரப்பு சாட்சியம் அளித்திடுவதற்கும் Re-call செய்திடவேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தரப்பு சங்கதி இந்நீதிமன்றத்திற்கு ஆச்சிரியத்தை ஏற்படுத்துகிறது. ஏனெனில் பிரதிவாதி கடந்த 15.09.2025-ம் தேதி இந்நீதிமன்றத்தில் பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தையும் குறியீடு செய்து பிரதிவாதியை வாதி தரப்பில் 06.10.2025-ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரம் எதுவும் பிரதிவாதிக்கு தெரியாதது போல் தன்னை சாட்சியாக விசாரித்திட வாய்ப்பு வழங்கிடவில்லை என தாவா மனுவில் சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்திற்கு ஆச்சியரித்தை ஏற்படுத்துகிறது. இந்நீதிமன்றம் பிரதிவாதி சாட்சியம் அளித்திட்ட பிறகும் பிரதிவாதி தரப்பு மற்ற சாட்சிகளுக்காக வழக்கினை 14.10.2025, 17.10.2025 மற்றும் 03.11.2025 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி 03.11.2025-ம் தேதி தனது தரப்பில் வேறு சாட்சிகள் இல்லை என endorsement செய்து பிரதிவாதி தரப்பில் சாட்சி அன்றைய தினம் முடித்து வைக்கப்பட்டு அசல் வழக்கானது இருதரப்பு வாதத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சூழலில் பிரதிவாதி சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்ற சங்கதியும் பிரதிவாதிக்கு வாய்ப்பு கொடுக்காமல் பிரதிவாதி சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்ற சங்கதியும் உண்மை அல்ல. அந்த அடிப்படையில் தாவா அசல் வழக்கில் இருதரப்பு வாதத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டதை வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்திடவேண்டி Re-call செய்திட தாவா மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக வா.சா.3 முன்னிலையாவதற்கான படி செலவுகளை மனுதாரர்/பிரதிவாதி செலுத்துவதன் பேரில் வா.சா.3ஐ திரும்ப அழைத்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்திட தாவா அசல் வழக்கு Re-call செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R — Digitally signed by PANDY R Date: 2026.04.16 16:25:17 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

PANDY R — Digitally signed by PANDY R Date: 2026.04.16 16:25:24 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.6/2026 in
O.S.No.55/2014
**Draft/Fair/Order**
16.04.2026.